விமர்சனம்

# வர்ணம்



சாதி வெறிக்கு அடிக்கப்பட்டிருக்கும் சம்மட்டிதான் 'வர்ணம்'. பூவில் செய்த செருப்பால் பூலோகத்தையே பதம் பார்த்திருக்கிறார் இயக்குநர் எஸ்.எம்.ராஜூ.

சாதிக்கலவரத்தில் அப்பாவை இழந்த மகனுக்கும் சாதிவெறி பிடித்துக்கொள்கிறது. தனது நோட்டுப்புத்தகத்தைக்கூட தாழ்த்தப்பட்ட மாணவி தொடக்கூடாது என்கிற ஆளவுக்கு வெறி. ஒரு கட்டத்தில் அவனே, அவளைக் காதலிக்கவும் செய்கிறான்.

பள்ளிக்கூட ஆசிரியையாக வந்து, தாழ்த்தப்பட்ட இளைஞனைக் காதலித்து, ஊரைவிட்டு ஓடும் கேரக்டரில் உயிர்கொடுத்து நடித்துள்ளார் மோனிகா.

சம்பத்தின் உருவமும் குரலும், சாதிவெறி கேரக்டருக்கு ரொம்பவே பொருந்துகிறது. விஜய சேதுபதி முகத்தில் சிறுநீர் கழித்து, மலக்கரைசலை ஊற்றும் காட்சியைப் பார்க்கும் உயர்சாதிக்காரர்களே அவரை அடிக்க வந்துவிடுவார்கள்.

மாணவன் கிரி, மாணவி அஸ்வதா இருவரும் வெகு இயல்பாக நடித்துள்ளனர். ஆதிஷ் நடிப்பும் அட்டகாசம். கராத்தே ராஜூவின் முனியாண்டி நடனம் வித்தியாசம். கிருஷ்ணா டாவின்சி, மருதுபாண்டியன், பாலாஜி தரணிதரன், ஸ்டாலின், எஸ்.எம். ராஜூ இணைந்து கதை, திரைக்கதை, வசனம் எழுதியுள்ளனர். கருத்தும் இயக்கமும் எஸ்.எம். ராஜூ. காம்ப்ரமைஸ் இல்லாமல் கருத்து சொல்லும் படம். ■

